# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2019-20ன் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 72 / 2019-20) ஒப்பந்தப்புள்ளிகள் 02.07.2019 அன்று முதன் முறையாக கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| **1** | **2** | **3** | **4** | **5** |
| | **பொதுநிதி 2019 -20 (முதல் அழைப்பு)** | | | |
| 1 | அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 61க்குட்பட்ட வடக்கு காட்டூர் அம்பேத்கார் நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான பொதுசுகாதார மையத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு சுற்றுச் சுவர் கட்டும் பணி<br><br>மதிப்பீடு<br>ரூ.15.00 லட்சம் | ஆர். தட்சிணா மூர்த்தி, உறையூர், திருச்சி<br><br>பி.ஞானசேகர், திருச்சி | 4.98 % அதிகம் (பேச்சுவார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 0.01 சதவீதம் குறைவு)<br><br>7.25% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஆர்.தட்சிணா மூர்த்தி, திருச்சி** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் **4.98 சதவீதம்** கூடுதலாக கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரை, அவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில் **திரு.ஆர்.தட்சிணா மூர்த்தி, திருச்சி** திருச்சி அவர்கள் தனது 07.08.19ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான விலை விகிதத்தில்** (4.98 சதவீதம் கூடுதல் விலை விகிதத்திற்கு பதிலாக) செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[ இ3/4652/2019]**

**தீர்மானம் எண்.483 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

அரசாணை (4D) எண் 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள் 05.06.2018–ல் உள்ளாட்சிகளில் விளம்பரங்களை முறைப்படுத்துவதற்கான நடைமுறை (Outdoor Advertising Policy) தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள் 31.01.2019–ல் விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி வழங்குவது குறித்து, நகராட்சி சட்டம் (5வது திருத்தம்) சட்டம் 2018 (தமிழ்நாடு சட்டம் 40/2018) அமலுக்கு கொண்டு வருவது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள் 31.01.2019–ல், தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பரப் பலகைகள் அனுமதித்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் 2003க்கான விதி திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை எண் 17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள் 31.01.2019–ல், தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பரப் பலகைகள் அனுமதித்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் 2003க்கான விதி திருத்தங்கள் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் 31.01.2019 அன்று, பாகம் 3 பிரிவு 1ஏ–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைகள் தனி அலுவலர் மன்றப் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(எப்1/7452/16/மையம்)**

**தீர்மானம் எண்.484 (பொருள்–2) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**